கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண் OS. No.100/2019 நாள்: 18.03.2026

பி.வா.சா.1 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பி.வா.சா –1 சுபாஷினி முன்னிலையானார். மொழிபெயர்பாளர் செல்வி. சுதாமணி அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

வாதிகள் தரப்பில் பி.வா.சா.1ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் ஒரே பிரதிவாதி என்றால் சரிதான்.இந்த வழக்கில் உள்ள 17 பிரதிவாதிகளும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஒருவர் பேர் மட்டும் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் ஆவார். நான் 8ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கு பிராது சொத்துக்களை பாகப்பிரிவினை கேட்டு நான் தான் வாதியாக இருந்து 4ஆம் பிரதிவாதி இறந்த பிறகு மற்ற பிரபதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு தாக்கல் செய்தேன்என்றால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரவில்லை. என்னுடைய சொத்தை தனியாக அளந்து கொடுக்க பரிகாரம் கேட்டுள்ளேன். நான் தான் வாதியாக இருந்து மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கின் அசல் பிராதின் ஒவ்வொரு பக்கத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். அசல் வழக்கில் கண்ட பிராதில் உள்ள விஷயங்கள் அனைத்தும் நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.100/2019 வழக்கில் நான் முதலில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிராது அசல் **நீ.ம.சா.ஆ. 1** ஆகும். மேற்படி நீ.ம.சா.ஆ 1 ஆன அசல் வழக்கான 100/2019 வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராதை முதலில் வழக்கறிஞர் R. ஜெயபாரதி என்பவர் மூலமாக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதன்

பிறகு R. ஜெயபாரதி என்ற எனது வழக்கறிஞரை மாற்றி விட்டு வழக்கறிஞர் திரு. ஜான்மோகன்தாஸ் என்ற வழக்கறிஞரை 2023 ஆம் வருடத்தில் மாற்றி இந்த வழக்கை தொடர்ந்து நடத்தி வந்தேன் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ. 1 பிராதில் எனக்கு பாத்தியப்பட்டதாக 6 ஏக்கர் 83 சென்டை கூட்டு சுவாதீனத்தில் இருந்து தனியாக பிரித்து எனக்கு தனிப்பட்ட முறையில் பிரித்து ஒப்படைக்க கோரி பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால் 6 ஏக்கர் 83 செண்டிற்காக வழக்கு தாக்கல் செய்யவில்லை. 5 ஏக்கர் 80 செண்டிற்காக வழக்கு தாக்கல் செய்தேன். 6 ஏக்கர் 83 செண்டு என தவறுதலாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது. 21 ஏக்கர் 60 செண்டு நிலம் 9 சர்வே எண்களுக்கு சம்பந்தப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தை 10.02.2023 ஆம் தேதி பழனிசாமி வகையறாவிடம் இருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் சர்வே எண். 38/2 ல் பிரிவினையில்லாத 24.1/2 செண்டு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.61/3 ல் பிரிவினையில்லாத 6.1/2 செண்டு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.45/4, 45/5 ல் பிரிவினையில்லாத 9.1/2 செண்டு என காட்டப்பட்டுள்ளது என்றால்சரிதான். நான் கிரையம் வாங்கிய பி.வா.சா.ஆ. 1 முதல் 5 வரையிலான அனைத்து ஆவணங்களிலும் பிரிவினையில்லாத சொத்துக்களை கிரையம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் 1 முதல் 5 லக்க சொத்துக்களும் சேர்ந்து 21 ஏக்கர் 6 செண்டு புஞ்சை நிலத்திற்கு நான்குமால் காண்பிக்கப்பட்டு அந்த நிலத்தில் பிரிவின்றி 9 ல் 1 பாகத்தில் 3 ல் 1 பாகம் 78 செண்டு (1/27) என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 1 முதல் 5 ஆவணங்களிலும் சேர்ந்து கிணறு பாத்தியம் உட்பட மொத்தம் பிரிவினையின்றி 5 ஏக்கர் 80 செண்டிற்கு மட்டும் தான் நான் கிரையம் பெற்றதாக என்னுடைய ஆவணங்களில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ. 1 ஆவணத்தில் வேண்டுமென்று தவறுதலாக பிரதிவாதிகளின் நிலத்தை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் 6 ஏக்கர் 83 செண்டு என்றும் சில இடங்களில் 6

ஏக்கர் 5 செண்டு என்றும் காண்பித்துள்ளேன் என்றால் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் 9 புல எண்களில் 21 ஏக்கர் 6 செண்டு என காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி ஆவணத்தில் அயன் சர்வே எண்கள். 38/2, 45/4, 45/5, 61/3, 62/5, 496/1, 496/2, 496/3, 45/6 ஆகிய புல எண்களில் மொத்தம் 21 ஏக்கர் 6 செண்டில் (1/27) பிரிவினையின்றி 78 செண்டு மட்டும் பி.வா.சா.ஆ. 5 ல் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 21 ஏக்கர் 6 செண்டில் என்னையும் சேர்த்து மொத்தம் 18 கூட்டு உரிமையாளர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். சொத்திற்கு ஆதி காலத்தில் ஏழு கூட்டு வயல் என்ற பெயர் உண்டு என்றால் சரிதான். அதன்பிறகு அது 9 கூட்டு வயல் என மாறிவிட்டது என்றால் சரிதான். ஏழு கூட்டு வயல் என்ற பெயர் வந்து 50,60 வருடங்கள் இருக்கும் என்றால் இல்லை. 100 வருடங்கள் இருக்கும் . அந்த விவரத்தை நீ.ம.சா.ஆ. 1 பிராதில் 21 ஏக்கர் 6 செண்டு அதனுடைய கிணற்று பாத்தியம் உட்பட அனைத்து கூட்டு உரிமையாளர்களும் சேர்ந்து தொன்று தொட்டு காலம் காலமாக பிரிவினையின்றி கூட்டாக விவசாயம் செய்து வந்தனர் என்று சொல்லியுள்ளேன் என்றால் தெரியவில்லை. நீ.ம.சா.ஆ. 1 ஆவணத்தில் பாரா 5 ல் எனக்கு பாத்தியப்பட்டதாக கூறி பிரிவினையில்லாத 6 ஏக்கர் 83 செண்டை மற்ற கூட்டு உரிமையாளர்களுடன் சேர்ந்து விவசாயம் செய்து அனுபவித்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ. 1 ஆவணத்தில் பாரா 6 ல் பக்கம் 5 ல் பொதுவில் வைத்து விவசாயம் செய்து செலவு நீங்கி வரவை அனைவரும் அவரவர் பங்கிற்கு ஏற்றப்படி பெற்று பன்னெடுங் காலமாக அனுபவித்து வருகிறோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. 6 ஏக்கர் 5 செண்டை பொறுத்து நான் 07.04.2019 ஆம் தேதி பஞ்சாயத்து பேசியதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. நீம.சா.ஆ. 1 பிராதில் எனக்கு பிரிவினையில்லாத 5 ஏக்கர் 80 செண்டு உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும் அதன்படி CPC O 12 R 6 ன் படி தீர்ப்பு பிறப்பிக்கலாம் என்றும் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவர்களுடன் சேர்ந்து கூட்டு உரிமையாளராக இருந்து அனுபவித்தன் பேரில் தான் நீம.சா.ஆ. 1 பிராதில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி நீதிமன்ற முத்திரை கட்டண சட்டம் 37(2)-ன் கீழ் நீதிமன்ற

கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கை வேகமாகவும் விரைவாகவும் நடத்தி முடிக்க வேண்டும் என கேட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமதுரை கிளையில் CRP 2358/2022 என மனு தாக்கல் செய்து 05.01.2023 ஆம் தேதி உத்தரவு பெற்றேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது போடிநாயக்கனூர் தாசில்தார் மீது பிராது சொத்துக்களை பொறுத்து அளக்க ரிட் மனு எண்.19495/2023 தாக்கல் செய்து கடந்த 11.08.2023 ஆம் தேதி உத்தரவு பெற்றேன் என்றால் சரிதான். அதில் கூட்டு உரிமையாளர்களை தரப்பினராக சேர்க்காமல் உத்தரவு பெற்றேன் என்றால் என்னுடைய நிலத்தை மட்டும் பத்திரப்படி அளந்து கொடுக்க வேண்டுமென மனு தாக்கல் செய்தேன். சமூகம் நீதிமன்றத்தில் என்னுடைய பங்கை சட்டப்படி பிரித்து கொடுக்கும் படி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து விட்டு வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா நிலத்தை அளந்து கொடுக்க உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யும் செயல் என்று சொன்னால் சரியல்ல. நான் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்ததால் 1 ஆம் வாதி சிவமணி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் WMP 22600/2023 மற்றும் Review application 80994/2023 தாக்கல் செய்து அதில் கடந்த 08.11.2023 ஆம் தேதி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த உத்தரவில் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த இந்த வழக்கில் மட்டுமே தீர்ப்பு காண இயலும் என்று சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 21 ஏக்கர் 6 செண்டு நிலத்தில் 4 ஏக்கர் இடம் மட்டும் முள் மேடாக விவசாயத்திற்கு பயனற்ற வகையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. விவசாயம் செய்கிறார்கள். 21 ஏக்கர் 6 செண்டு நிலத்தில் பிரிவினையில்லாத 5 ஏக்கர் 80 செண்டை வாங்கி கொண்டு ஆனால் அதில்மதிப்பு மிக்க பகுதியை தென்னை மரங்களுடன் சேர்த்து அராஜகமாக முள் வேலி அமைத்து நிரந்தரமாக ஆக்கிரமிக்க முயற்சி செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முள் வேலி அமைத்த காரணத்தால் அதனை உடனடியாக அகற்ற கோரி இந்நீதிமன்றத்தில் IA. 2/2024 மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். முள் வேலியை

உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் இந்த வழக்கு முடியும் வரை ஆக்கிரமிப்பு எதுவும் செய்ய கூடாது என்றும் செயலுறுத்து கட்டளை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் அந்த உத்தரவை எதிர்த்து நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CMA .334/2024 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மேல் முறையீடு வா.சா.ஆ.7 ன் படி கடந்த 20.08.2024 ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் கூட முள் கம்பி வேலியை அகற்றாமல் நீதிமன்ற அவமதிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் உதவியுடன் முள் வேலியை அகற்ற கோரி வாதி சிவமணி IA. 4/2024 மனு தாக்கல் செய்து அதன் மூலம் கடந்த 11.12.2024 ஆம் தேதி தான் போலீசார் மூலம் முள் வேலி அகற்றப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் நீதிமன்ற உத்தரவுகளை மீறி அவமதிப்பு செய்ததாக எனக்கு வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ. 9 அறிவிப்பு அனுப்பப்பட்டது என்று சொன்னால் இல்லை. நான் தாக்கல் செய்த வழக்கை மேல் நடத்தினால் நான் விரும்பும் மதிப்பு மிக்க பகுதியை ஆக்கிரமிப்பு செய்ய இயலாது என்ற காரணத்தினால் மேற்படி வழக்கை IA. 1/2023 மனு தாக்கல் செய்து நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.100/2019 வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் தெரியாது என்று சாட்சி சொல்லிவிட்டு வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்று மீண்டும் சாட்சியம் அளிக்கிறார். நான் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்து வேண்டுமென்று வாபஸ் பெற்றுக்கொண்ட காரணத்தினால் 1 ஆம் வாதி சிவமணி மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சீராய்வு மனு 929/2024 தாக்கல் செய்து அதன்படி மேற்படி வழக்கை வாதியை பிரதிவாதியாகவும் பிரதிவாதிகள் வாதியாகவும் இருந்து மேல் நடத்த வா.சா.ஆ. 8 ஆவணம் வாயிலாக மேற்படி வழக்கை மேல் நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.நான் வாதியாக இருந்து தாக்கல் செய்த வழக்கை தற்போது வாதிகள் மேல் நடத்துகிறார்கள் என்றால் இல்லை. அதனால் இந்த வழக்கில் நான் எதிர்வழக்காட முரண்தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் நடத்தும் இவ்வழக்கில் எனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு

தெரியவில்லை. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உண்மையில் பிரதிவாதிக்கு கிரையம் பதிவு செய்த முன் உரிமையாளர்களின் அனுபவத்திலும் பராமரிப்பிலும் இருந்து வந்து பின்னர் பிரதிவாதியின் அனுபவத்திலும் பராமரிப்பிலும் இருந்து வருகின்ற சுமார் 6 ஏக்கர் 5 செண்டு நிலத்தை மட்டுமே பிரித்து தரும்படியும் வாதிகள் இடையூறுசெய்ய கூடாது என்று தான் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்திருந்தார்என்று சொல்லபப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நீம.சா.ஆ. 1 பிராதில் மேற்படி விஷயத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் பாரா 5ல் பக்கம் 5ல் உண்மையில் பிரதிவாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தக்க உத்தரவு பெற்று அதன்படி அரசு சர்வேயர், VAO ஆகியோர்கள் வருவாய் துறை பதிவேடுகளின் படியும் பிரதிவாதியின் அனுபவத்திலும் பராமரிப்பிலும் இருந்து வந்த நிலத்தை மட்டும் அளந்து காட்டி பின்பு அதன்படி தான் பிரதிவாதி கம்பி வேலி அமைத்தார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விஷயத்தை நான் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ. 1 பிராதில் சொல்லவில்லைஎன்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். IA.2/2024 மனுவில் வாதிகள் உண்மையை மறைத்து உண்மைக்கு புறம்பாக உத்தரவு பெற்றுள்ளனர் என்று சொல்லியுள்ளது குறித்து அந்த உத்தரவின் மேல் மாண்புமிகு உச்சநீதிமன்றத்திற்கு சென்றேனா என்றால் எனக்கு தெரியவில்லை. முள் வேலியை அகற்றுவதற்கு வாதிகள் தாக்கல் செய்த மனு அனுமதிக்கபட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன் மதுரை கிளையிலும் இந்நீதிமன்ற உத்தரவு ஊர்ஜீதம் செய்யப்பட்ட நிலையில் அந்த உத்தரவின் மேல் மேல் முறையீடு செய்யாமல் இந்நீதிமன்றத்தில் பெற்ற உத்தரவு தவறானது என்று நான் சொல்வதற்கு எந்தவித அறுகதையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது உண்மை என்று ஒப்புக்கொண்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 7ல் உண்மையில் பிரதிவாதி தான் கிரையம் வாங்கும் போது முன் உரிமையாளர் தன்னிடம் ஒப்படைத்தும்

தற்போது பிரதிவாதியின் அனுபவித்திலும் பராமரப்பிலும் உள்ள 6 ஏக்கர் 5 செண்டு நிலத்தை பிரித்து தரும்படி வழக்கு தாக்கல் செய்தார் என்றும் தற்போது அந்த நிலத்தை கேட்டு பிரதிவாதியாக மேல் நடத்துகிறார் என்றும் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி விஷயத்தை நீ.ம.சா.ஆ. 1 பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மொத்தமுள்ள 21 ஏக்கர் 6 செண்டு நிலத்தில் இரு கிணறுகள் உள்ளது என்றும் அதில் ஒரு கிணற்றில் மட்டும் தண்ணீர் உள்ளது என்றும் சொன்னால் இல்லை. இரண்டு கிணற்றிலும் தண்ணீர் உள்ளது. கிணற்றிலிருந்து வரும் தண்ணீரை மொத்தம் 21 ஏக்கர் 6 செண்டி நிலத்திற்கு நானும் கூட்டு உரிமையாளர்களும் சேர்ந்து எடுத்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். 6 ஏக்கர் 5 செண்டை நான் தனியாக விவசாயம் செய்து வருவதாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. 25 லட்சம் வரை நான் செலவு செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதனால் தான் மேற்படி விவரங்களை நீ.ம.சா.ஆ. 1 பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சென்னையில் குடியிருந்து வருவதால் பிரதிவாதிகள் நிலத்தை கிரையம் கேட்டதாகவும் நான் கிரையம் கொடுக்க மறுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. 6 ஏக்கர் 5 செண்டில் 25 லட்சம் செலவு செய்து 200 தென்னை மரங்களையும் வளர்த்தும், 70 தென்னை கன்றுகளை வைத்தும் பாக்கு மரங்களையும் வைத்து தனிப்பட்ட முறையில் விவசாயம் செய்து வந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு நான் பொய் சொல்லியுள்ள காரணத்தினால் தான் நீ.ம.சா.ஆ. 1 பிராதில் மேற்கூறிய சங்கதிகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கிரையம் பெற்ற சில நிலம் பயன்படுத்த முடியாத பள்ளமாக இருந்ததாகவும் மண் கொட்டி பாக்கு தென்னை மரம்13 வருடங்களுக்கு முன்பு வைத்து தனிப்பட்ட முறையில் செலவு செய்து பராமரித்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விஷயங்கள் நீ.ம.சா.ஆ. 1 பிராதில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. ஏழு கூட்டு வயல் என்பது 21 ஏக்கர் 60 செண்டு என்றும் அதில் 1 ஆம் வாதி சிவமணிக்கு 8 ஏக்கர் 60

செண்டு பாத்தியம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1, 2 வாதிகளுக்கு வா.சா.ஆ.10 முதல் 19 வரையிலான ஆவணங்களின்படி மொத்தம் உள்ள 21 ஏக்கர் 60 செண்டின் பிரிவினையில்லாத 8 ஏக்கர் 60 செண்டு பாத்தியம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் 3 ஆம்வாதி முருகன் என்பவருக்கு வா.சா.ஆ. 20 ன்படி பிரிவினையில்லாத 80 செண்டு பாத்தியம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 5 ஆம் வாதி ஆனந்தராஜ் என்பவருக்கு வா.சா.ஆ. 21, 22 ன் படி 2 ஏக்கர் 40 செண்டு பாத்தியம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.வா.சா.ஆ- 23 ன்படி 6 முதல் 8 வாதிகளுக்கு சேர்த்து 40 செண்டும் பூர்வீகமாக 40 செண்டும் ஆக மொத்தம் 80 செண்டும் பாத்தியம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 24-ன் படி 11 ஆம் வாதிக்கு 80 செண்டு பாத்தியம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 21 ஏக்கர் 60 செண்டையும் அதனுடைய கூட்டு உரிமையாளர்கள் சேர்ந்து அவர்களுக்குள் ஒருவருக்கு குத்தகைக்கு விட்டும் வரும் வருமானத்தில் செலவு போக கூட்டு உரிமையாளர்கள் அனைவரும் லாபத்தை பகிர்ந்த கொள்வது வழக்கம் என்று சொன்னால் எனக்கு அதில் சம்பந்தம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.27 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. குத்தகைக்கு விட்டு லாப நஷ்டத்தை ஏழு கூட்டு வயல் புத்தகத்தில் எழுதுவார்கள் என்றும் அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் தற்போது வழக்கிற்காக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 25 ஆவணத்தில் உள்ள 4 வது கையெழுத்து என்னுடையது இல்லை. வா.சா.ஆ. 25 ஆவணம் கடந்த 01.04.2017 ஆம் தேதி இந்த வழக்கின் வாதி ஆனந்தராஜிக்கு குத்தகைக்கு விட்டதற்கான ஆவணம் என்றும் அதில் நான் கையொப்பம் செய்துளளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி ஆனந்தராஜ்க்கு குத்தகைக்கு விட்டு அதில் லாபம் வந்ததில் நான் பங்கு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்கறிஞர் ஜெயபாரதி மூலமாக ஆனந்தராஜ் மற்றும் வெண்முருகன் ஆகியோருக்கு கடந்த 03.06.2020 ஆம் தேதி

அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் எனது கட்சி காரர் பிரிவினையில்லாத 5 ஏக்கர் 80 செண்டு பி.வா.சா.ஆ. 1 முதல் 5 ஆவணங்களின் வாயிலாக கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் கிரைய ஆவணங்களின் படி கிரையம் பெற்று கிரையம் பெற்ற நாள்முதல் நானும் , 1 முதல் 12 வாதிகளும் சேர்ந்து கூட்டு உரிமையாளர்களாக இருந்து விவசாயம் செய்து கூட்டு சுவாதீனத்தில் சட்டப்படி அனுபவம் செய்து வருகின்றார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்த சொத்தையும் கடந்த ஏப்ரல் 2017 ல் 5 ஆம் வாதி ஆனந்தராஜீக்கு குத்தகைக்கு விட்டதில் குத்தகை பணம் பாக்கி இருப்பதாகவும் அதை செலுத்த வேண்டும் என்று கூறி 5 ஆம் வாதி ஆனந்தராஜீக்கும் 11 ஆம் வாதி வெண்முருகனுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் அறிவிப்பு கிடைத்த ஒரு வாரத்திற்குள் தாங்கள் அனைவரும் என் கட்சி காரருக்கு அடியில் கண்ட சொத்துக்களிலிருந்து (21 ஏக்கர் 60 செண்டு) சட்டப்படி உண்டான பிரிவினையில்லாத மொத்தம் 9 பங்கில் 2.1/2 பங்கு படி வரவேண்டிய தென்னைமரம் மேல்மகசூல் குத்தகையானரூ.37222/- ஐ என் கட்சி காரரிடம் செலுத்தி தகுந்த ரசீது பெற வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 03.06.2020 ஆம் தேதியிட்டு நான் 5 மற்றும் 11 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு நகல் **வா.சா.ஆ- 29** ஆகும். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் நான் கடந்த 14.07.2019 ஆம் தேதி அனைத்து வாதிகளுக்கும் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பின் சார்பு செய்யப்பட்ட நகல் 12 அசல் அஞ்சலக ரசீதுகளுடன் **வா.சா.ஆ 30** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மொத்தமுள்ள 21 ஏக்கர் 60 செண்டை 54 பாகமாக பிரித்தால் 40 செண்டு உரிமை உள்ள ஒரு நபருக்கு 1/54 பாகம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1, 2 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பிரிவினையில்லாத 8.60 ஏக்கர் நிலத்திற்கு 21.5/54 பாகமும், 3 ஆம் வாதிக்கு 2/54 பாகமும், 4 மற்றும் 13 முதல் 17 வாதிகளுக்கு 2/54 பாகமும், 5 ஆம் வாதிக்கு 6/54 பாகமும், 6 முதல் 8 வாதிகளுக்கு 2/54 பாகமும், 9 ஆம் வாதிக்கு

3/54 பாகமும், என்னுடைய தங்கை 10 ஆம் வாதி ரூபாசினிக்கு 2/54 பாகமும், எனக்கு பாத்தியப்பட்ட பிரிவினையில்லாத 5.80 ஏக்கருக்கு 14.5/54 பாகமும், ஒவ்வொரு சர்வே எண்களிலிருந்தும் நயம்பட சட்டப்படி பிரித்து கிடைக்க வேண்டிய பாகம் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது நான் குத்தகைக்கு விட்டதாக சொல்லியுள்ளதில் கடந்த 06.05.2023 ஆம் தேதி சுரேஷ்குமார் என்பவருக்கு இந்த வழக்கிற்காக குத்தகை பத்திரம் எழுதி கொடுத்து உற்பத்தி செய்துள்ளேன் என்றும் அது சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ 7 ஆவணம் 19.08.2025 ஆம் தேதி பாண்டியராஜன் என்பவருக்கு எழுதி கொடுத்த குத்தகை பத்திரமும் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சாஆ. 8 ஆவணம் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது இந்த வழக்கிற்காகவும் பொறுப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும் மேற்படி ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. பி.வா.சாஆ. 9 ஆவணமானது இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் நான் அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு பின்னிட்டு கடந்த 28.08.2019 ஆம் தேதி பிரிவினையில்லாத 21.60 ஏக்கரில் விலை மதிப்பு மிக்க பகுதியை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் பெறப்பட்ட கடன் என்று சொன்னால் சரியல்ல. 21.60 ஏக்கருக்கும் பட்டா எண்.92 மற்றும் 119 என்றால் சரிதான். அந்த இரண்டு பட்டாவும் மொத்தம் 23 பேருடன் பட்டா ஏற்பட்டு என்னுடைய பெயரும் சேர்க்கப்பட்டு கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 10 ல் ரசீதுகள் இந்த வழக்கிற்காக வழக்கு நிலுவையில் இருக்கும் போது உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சாஆ. 11 ல் உள்ள 3 ரசீதுகளும் இந்த வழக்கிற்காக வழக்கு நிலுவையில் இருக்கும் போது உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 முதல் 15 வரையுள்ள ரசீதுகள் இந்த வழக்கிற்காக வழக்கு நிலுவையில் இருக்கும் போது உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ- 6 முதல் 15 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றும் மேலும் மேற்படி

ஆவணங்கள் இந்நீதிமன்றம் IA.2/2024 ல் பிராது சொத்துக்கள் சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட செயலுறுத்த கட்டளை பரிகாரத்திற்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு செயல் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்ட சங்கதிகள் அனைத்தும் நான் தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் முரணாக உள்ள காரணத்தினால் இந்த வழக்கில் நான் பிரதிவாதியாக எதிர் கட்சி செய்ய முரண்தடை படுத்தப்படுகிறேன் என்றால் சரியல்ல. அதே போன்று நான் அனுப்பிய இரண்டு சட்ட அறிவிப்பில் கண்ட சங்கதிகளுக்கும் நான் தாக்கல் செய்துள்ள பிராதில் கண்ட சங்கதிகளுக்கும் முற்றிலும் முரணாக நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்ட சங்கதிகள் அனைத்தும் நிராகரிக்க பட வேண்டும் என்றும் என்னுடைய சாட்சியமும் நிராகரிக்கப்பட வேண்டும் என்றும்வாதிகளின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR
Digitally signed by SANKAR
Date: 2026.03.18 17:30:18 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.